**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

***16th பிப்ரவரி / February 2025 ஞாயிறு ஆராதனை / Sunday Service***

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திரு. ஜேக்கப் ஜான்சன் பாபு**
Call to Worship — Mr. Jacob Johnson babu

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திரு. ஜேக்கப் ஜான்சன் பாபு**
Prayer — Mr. Jacob Johnson babu

✝ **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

**இயேசுவை நம்பிப் பற்றிக்கொண்டேன்**

*1. இயேசுவை நம்பிப் பற்றிக்கொண்டேன்*
*மாட்சிமையான மீட்பைப் பெற்றேன்*
*தேவகுமாரன் மீட்டுக் கொண்டார்*
*பாவியாம் என்னை ஏற்றுக் கொண்டார்*

**இயேசுவைப் பாடிப் போற்றுகிறேன்**
**நேசரைப்பார்த்துப் பூரிக்கிறேன்**
**மீட்பரை நம்பி நேசிக்கிறேன்**
**நீடூழி காலம் ஸ்தோத்திரிப்பேன்**

*2. அன்பு பாராட்டிக் காப்பவராய்*
*என்தனைத்தாங்கிப் பூரணமாய்*
*இன்பமும் நித்தம் ஊட்டுகிறார்*
*இன்னும் நீங்காமல் பாதுகாப்பார்*

*3. மெய்ச் சமாதானம் ரம்மியமும்*
*துய்ய தேவாவி வல்லமையும்*
*புண்ணிய நாதர் தந்துவிட்டார்*
*விண்ணிலும் சேர்த்து வாழச்செய்வார்.*

✝ ***மாறி வாசித்தல் 7ம் ஞாயிறு*** — ***சபையார் இணைந்து***
"சங்கீதம் 23" — Congregation

"கர்த்தர் என் மேய்பராயிருக்கிறார"

**Psalter Reading "Psalm 23"**

✝ **தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**
Thanksgiving & Pastoral Prayer

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord's Prayer — Congregation

✝ **காணிக்கை பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

**வாரா வினை வந்தாலும்**

**வாரா வினை வந்தாலும் சோராதே, மனமே;**
**வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே.**

*1. சூரன் சதித்துன் மீது வலை வீசினாலும்,*
*சோராதே, ஏசுபரன் தஞ்சம் விடாதே;*

*2. உலகம் எதிர்த்துனக்கு மலைவுசெய்தாலும்*
*உறுதிவிட்டயராதே நெறி தவறாதே;*

*3. பெற்ற பிதாப்போல் உன் குற்றம் எண்ணாரே*
*பிள்ளை ஆகில் அவர் தள்ளிவிடாரே.*

*4. தன் உயிர் ஈந்திட்ட உன் யேசுநாதர்*
*தள்ளுவரோ? அன்பு கொள்ளவர் மீதே.*

*5. மரணம் உறுகின்ற தருணம் வந்தாலும்,*
*மருள விழாதே நல் அருளை விடாதே.*

*6. வையகமே உனக்குய்ய ஓர் நிலையோ?*
*வானவனை முற்றும் தான் அடைவாயே!*

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — ***மிஸ். ப்ளெஸி***
***II கொரிந்தியர் 1 : 3 - 5*** — Miss. Blessy

Scripture Reading
2 Corinthians 1 : 3 – 5

**அருளுரை** — **போதகர். ஜேசுதாஸ் சார்லஸ்**
Sermon — Pastor. Jesudoss Charles

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

**என் இயேசு ராஜா சாரோனின் ரோஜா**

**என் இயேசு ராஜா சாரோனின் ரோஜா**
**உம் கிருபை தந்தாலே போதும்**
**அலைமோதும் வாழ்வில் அலையாமல் செல்ல**
**உம் கிருபை முன் செல்ல அருளும்**

*1. கடல் என்னும் வாழ்வில் கலங்கும் என் படகில்*
*சுக்கான் பிடித்து நடத்தும் என் தேவா*
*கடலினைக் கண்டித்த கர்த்தர் நீரல்லோ*
*கடவாத எல்லையை என் வாழ்வில் தாரும்*

*2. பிளவுண்ட மலையே புகலிடம் நீரே*
*புயல் வீசும் வாழ்வில் பாதுகாத்தருளும்*
*பாரினில் காரிருள் தேசங்கள் அணுகாமல்*
*பரமனே என் முன் தீபமாய் வாரும்*

*3. எதிர்க் காற்று வீச எதிர்ப்போரும் பேச*
*என்னோடிருப்பவர் பெரியவர் நீரெ*
*இயேசுவே யாத்ரையில் கரை சேர்க்கும் தேவன்*
*என் ஜீவ படகில் நங்கூரம் நீரே*

**அறிவிப்புகள்**
Announcements

✝ **மனப்பாட வசனங்கள்** — **சபையார் இணைந்து**
***Memory Verses*** — Congregation

***II கொரிந்தியர் 12 : 9***
***2 Corinthians 12 : 9***
***9. அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** **/ Indicates Congregation standing**